பிரிவு 1, முகப்புரை நெடுந்தலைப்பு, ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு திரு. தா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

''1986ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 42/1986) நிறை வேற்றப் பெற வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

4. அறிவிப்புகள் (தொடர்ச்சி).

(ஔ) திறந்த வெளிகள் (அழுகைக் குலைத்தலைத் தடுத்தல்) திருத்தச் சட்ட முன் வடிவு (1986) (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஒரு அறிவிப்பு: தமிழ்நாடு 1986ஆம் ஆண்டு திறந்த வெளிகள் (அழகைக் குலைத்தலைத் தடுத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவை (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 39/1986)* ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள ஆளுநர் தமது இசைவைத் தெரிதுள்ளார்கள்.

7, அரசினர் சட்ட முன்வடிவுகள் தொடர்ச்சி.

(அஅஅ) திறந்த வெளிகள் (அழகைக் குலைத்தலைத் தடுத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு. 1986.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்

''1986-ஆம் ஆண்டு திறந்த வெளிகள் (அழகைக் குலைத்தலைத் தடுத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 39/1986)** ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்''.

---

* 1936ஆம் ஆண்டு......தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் அச்சிடப்பெட்டுள்ளது.

4. 1986ஆம் ஆண்டு மே 10ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் அச்சிடப் பெற்றுள்ளது.

TRUTH ALONE TRIUMPHS